ஸ்ரீரஸ்து.

ஸ்ரீரங்கனாத பரப்பிரம்மணே நம:

ஸ்த்சூத்ர தர்மம்.

ஸம்ஸ்க்ருதபாஷையில் பரிசயமில்லாதவர்களாயும்
வைதீக மதாசாரங்களில் விச்வாஸ
முடையவர்களான
ஸத் சூத்ரர்களுடைய உபகாரார்த்தமாக
புராதன தர்ம சாஸ்திரங்களிலிருந்து

புத்தங்கோட்டகம்
ஸ்ரீ உ. வே. வித்வான்,
ஸ்ரீநிவாஸாச்சாரியரால்,
மொழிபெயர்க்கப்பட்டது.

திருச்சி, ஸ்ரீ நிலையம் அச்சியந்திரசாலையில்,
பதிப்பிக்கப்பெற்றது.
1933.

குறிப்பு.

இவ்வுலகத்தில் ஒவ்வொரு மனிதனும் தன் தன் ஜாதி தர்
ங்களை ஒருநாளும் விடக்கூடாதென்றும், அந்த தர்மங்களை
ஸ்திரப்படி நன்கனுஷ்டித்தால் தான் பரலோகத்தில் விசேஷ
க்ஷேமத்தையடையலாமென்றும் ஸ்ரீபகவத்கீதை அத். 18-ல்
45-46-வது ச்லோகங்களில் ஸர்வேச்வரனால் அருளிச்செய்
ப்பட்ட வார்த்தைகளில் விசேஷ நம்பிக்கையுள்ளவர்களான
வைஷ்ணவ ஸத் சூத்ரர்கள் தங்களுடைய ஜாதி தர்மங்களை
யெல்லாம் ஸம்ஸ்க்ருத ரூபங்களான தர்மசாஸ்த்ர க்ரந்தங்க
ளிலேயே சொல்லப்பட்டிருப்பதால் ஸம்ஸ்கிருத பாஷையில்
பரிசயமில்லாத தாங்களும் ஷை தர்மங்களை நன்கறிந்து அனுஷ்
டித்து க்ஷேமத்தை அடையும்படி ஷை தர்மசாஸ்திர க்ரந்தங்
களில் ஆங்காங்கு சொல்லப்பட்டிருக்கும் ஸத்சூத்ர தர்மங்களை
தமிழ் பாஷையில் எளிதான நடையில் எழுதித் தரவேண்டு
மென்று கேட்டுக்கொண்டதினால் தர்மசாஸ்திரங்களில் சொல்
லப்பட்டவைகளாயும் ஸத்சூத்ரர்கள் நித்யமனுஷ்டிக்கவேண்
டியவைகளுமான தர்மங்கள் இங்கு சுருக்கமாக யெழுதப்பட்டி
ருக்கின்றன.

தற்காலத்தில் சூத்திரர்களுக்குள்ளும் சைவ வைஷ்ணவ
பேதங்களும் அதிலும் உட்பிரிவான பற்பல தர்மபேதங்
களிருப்பதால் அவை எல்லாவற்றையும் எழுதினால் க்ரந்தம்
மிகவும் விரிவாகுமாகையினால் அவை இங்கு எழுதப்படவில்லை.
ஷை விஷயங்களைத் தெரிந்துகொள்ள ஆஸ்தையுள்ளவர்கள்
அந்தந்த ஸம்ப்ரதாயத்திலுள்ள பெரியோர்களை கேட்டுத்தெரிந்
து கொள்ளவேண்டியது.

ஜாதி தர்மங்கள் எல்லாம் பெரும்பாலும் இதில் எழுதப்
பட்டிருப்பதுதான்.

இதில் சில மந்திரங்கள் முதலிய ரகஸ்ய விஷயங்கள் உப
தேசித்தே தெரிந்துகொள்ள வேண்டியனவாகையினால் அவை
இங்கு எழுதப்படவில்லை. இதில்எழுதப்பட்டிருக்கும் விஷயங்க
ளை பெரும்பாலும் உபதேசித்தே தெரிந்துகொள்ளவேண்டி
யவையாகையினால் இதையும் தெரிந்த பெரியோர்களிடம் உப
தேச மூலமாகத் தெரிந்துகொள்வதுதான் நியாயமாகும்.

ஸ்ரீரஸ்து.

ஸத்சூத்ர தர்மம்.

ஆதிகாலத்தில் பகவானுடைய பாதத்தில் பிறந்த மனிதர்களும், பிறகு அவர்களுடைய வம்சத்தில் பிறந்தவர்களும் சூத்ரர்கள் என்று சொல்லப்படுவார்கள்.

அவர்களுக்குள் சாஸ்திரங்களிற் சொல்லியபடி தங்கள் ஜாதிதர்மங்களை விடாமல் அனுஷ்டித்து மத்யம் மாம்ஸங்களைப் புசிக்காமல் முந்திய மூன்று வர்ணத்தாருக்கும் உபகாரங்களைச் செய்கிறவர்கள் ஸத்சூத்திரர்கள் என்று சொல்லப்படுகிறார்கள்.

௸ ஜாதியில் பிறந்த குழந்தைகளை 6-மாதம் வரையில் ருதுவான ஸ்திரீகள், ப்ரஸவித்த ஸ்திரீகள், தீண்டாதவர்கள் தொட்டால் ஜலத்தினால் ப்ரோக்ஷிக்கவேண்டும்.

5-வது வயதுவரையில் ௸ தொடக்கூடாதவர்கள் தொட்டால் ஆசமனம் செய்விக்கவும். ஐந்தாவது வயதுக்குமேல் தொட்டால் ஸ்நானம் செய்யவேண்டியது.

ஆச்ரமம்.

ஸத்சூத்ரர்களுக்கு க்ரகஸ்தாச்ரமம் ஒன்றுதானுண்டு. மற்றைய ப்ரம்மசர்யம், வானப்ரஸ்தம், ஸங்யாஸம் யென்கிற ஆச்ரமங்கள் சாஸ்திரங்களில் நிஷேக்கப்பட்டிருப்பதால் ஸத்சூத்திரர்கள் ௸ 3-ஆச்ரம தர்மங்களை அனுஷ்டிக்கக்கூடாது.

தர்ம யோக்யதை.

ஸத்சூத்ரர்கள் விவாகம் செய்துகொண்டது முதல் தன்னுடைய ஸர்வ தர்மங்களையும் அனுஷ்டிக்க யோக்கியராகிறார்கள்.

விவாகம் ஆகாவிட்டாலும் 16-வது வயது பிறந்துவிட்டால் பத்னி சேர்ந்து செய்யவேண்டிய தர்மங்கள் தவிர மற்றைய ஸர்வ தர்மங்களுடைய வனுஷ்டானத்திற்கும் யோக்கியராகுவார்கள்.

உதயத்திற்கு முன் செய்யவேண்டியவை.

ஸத்சூத்ரர் சூரிய உதயத்திற்கு முன் 6-அல்லது 4-நாழிகைக்கு முன்னமேயே தூக்கத்தைவிட்டு எழுந்திருந்து பகவானை த்யானம் பண்ணிக்கொண்டு 7-தடவை ஹரி: என்று சொல்லவேண்டும். பிறகு கால்களையலம்பி மேற்சொல்லப் போகிறபடி ஆசமனத்தை செய்யவேண்டும்.

பிறகு படுக்கையிலேயே உட்கார்ந்து தனது குருபரம்பரையை அனுஸந்தித்துவிட்டு வாசுதேவாயநம: ஸங்கர்ஷணாயநம: ப்ரத்தியும்நாயநம: அநிருத்தாயநம: கேசவாயநம: நாராயணாயநம: மாதவாயநம: கோவிந்தாயநம: விஷ்ணவேநம: மதுசூதனாயநம: த்ருவிக்ரமாயநம: வாமனாயநம: ச்ரீதராயநம: ஹ்ருஷீகேசாயநம: பத்மநாபாயநம: தாமோதராயநம: மத்ஸ்யாயநம: கூர்மாயநம: வராகாயநம: நரஸிம்மாயநம: வாமனாயநம: பாசுராமாயநம: தாசரதயேநம: பலராமாயநம: க்ருஷ்ணாயநம: கல்கினேநம: என்கிற பகவானுடைய திருநாமங்களையும்,

ஸ்ரீயைநம: அம்ருதோத்பவாயைநம: கமலாயைநம: சந்த்ரஸோதர்யைநம: விஷ்ணுபத்ந்யைநம: வைஷ்ணவ்யை நம: வராரோகாயைநம: ஹரிவல்லபாயை நம: சார்ங்கிண்யைநம: தேவதேவிகாயைநம: ஸுரஸுந்தர்யைநம: மகாலக்ஷ்ம்யைநம: என்கிற மகாலக்ஷ்மியினுடைய திருநாமங்களையும்சொல்லி பிறகு ருஷிகளால் சொல்லப்பட்டதல்லாத ஸம்ஸ்க்ருத பாஷையிலுள்ள ஸ்தோத்திரங்களையும் ஆழ்வார்களருளிச்செய்த 'வாடினேன் வாடி, வாணிலா முறுவல், தாயே தந்தை' முதலான திவ்யப்ரபந்தம்

கலந்த பாசுரங்களையும் அர்த்தானுஸந்தாநத்தோடும் பக்தியோடும் இனியசொல்லால் கேட்டவர்களுடைய பாபமும் போகும்படி உயர்ந்த சப்தத்தினல் தெரிந்தவரையில் அனுஸந்தித்து இதுகாலம்வரையில் தானெடுத்த ஜன்மங்கள் எல்லாம் வீணுகப் போனதைக்குறித்து நிர்வேதத்தை அடைந்து மேல்நடக்கப் போகிற ஜீவனகாலமும் வ்யர்த்தமாகாதபடி பகவத் கைங்கர்யத்தோடு சேர்ந்து இருக்கவேண்டுமென்று பகவானைப் பிரார்த்தித்து தெளிவை அடைந்து ஸந்துஷ்டனுய் தனக்கு யோக்யமான பகவத் கைங்கர்யங்களையும் அதற்காகச் செய்யவேண்டிய லௌகிக காரியங்களையும் ஆலோசித்து நிச்சயிக்கவேண்டியது.

சாப்பிட்ட ஆகாரம் ஜீரணமாகாமலிருந்தால் மறுபடியும் படுத்து சூரியன் உதிக்கும் வரையில் தூங்கலாம். சூரியன் உதிக்கும் காலத்தில் தூங்கக்கூடாது.

ஸாத்விக த்யாகம்.

ஸத்சூத்ரானவர் தான் அவச்யம் செய்யவேண்டியதான நித்யம் நைமித்திகம் என்கிற ஸர்வ கர்மங்களையும் எனக்கு ஸ்வாமியான ஸர்வேச்வரன் தனக்கு ஸர்வப்பிரகாரத்தினுலும் சொந்தமான என்னையும், எனதுதேகம், இந்திரியங்களையும் மற்ற வஸ்துக்களையும்கொண்டு தனது திருப்திக்காகவே என்னுல் செய்யப்படும் இந்தக் காரியத்தை செய்வித்துக்கொள்ளுகிறுன் என்கிற தீர்மானத்தோடேயே ஆரம்பித்து முடிக்கவேண்டும்.

ஜலமலங்களை விடுவது.

சூர்யன் உதயத்திற்கு முன் எழுந்திருந்து பூமியை நம: என்று தான் காலால்மிதித்து நடக்கப்போவதை பொறுப்பதற்காக பூமிதேவியை நமஸ்கரித்துப் பிரார்த்தித்து இடதுகாலை பூமியில்வைத்து கிராமத்திற்கு வெளியில் நிர்ருதி திக்கில் ஜனங்கள் ஸஞ்சரிக்காத தூரத்திற்குப்போய் உத்தரீயத்தினுல் தலையையும், மூக்கையும், வாயையும் மறைத்துக் கட்டிக்கொண்டு ஓர் பெரிய பாத்திரத்தில் ஜலத்தையும் சௌசத்திற்கு வேண்

டிய சுத்தமான மண்ணையும், சுத்தமான இடத்தில் வைத்து விட்டு, யாகத்திற்கு உபயோகப்படாத உலர்ந்துபோன புல் பூண்டுகளினால் மலம் விடும் இடத்தை மறைத்து, பகலிலும் * ஸந்தியா காலங்களிலும் வடக்கு முகமாகவும், இராத்திரி எனப்படும் 3-யாமங்களில் தெற்கு முகமாகவும் உட்கார்ந்து 10-திக்குகளையும் பாராமல் கையினால் தலையைத் தொடாமலும் வேறு கவலையில்லாமலும், வார்த்தை சொல்லாமலும் ஜலமலங் களை விடவேண்டியது. உட்காரவேண்டிய பக்கத்தில் புண்ணிய தீர்த்தங்களிருந்தாலும் ப்ராம்மணன் தேவாலயங்களிருந்தாலும் அல்லது இது இன்னதிக்கு என்றுதெரியாத காலத்திலும் எந்த முகமாகவாவது உட்கார்ந்து ஜலமலங்களை விடலாம்.

நியமங்கள்.

தேவாலயம், நதிக்கரை, தர்பம், இளம்புல்லு, புற்று, மலை, ஜலம், யக்ஞபூமி, உழுதநிலம், புண்ணிய மரத்தடி, வழி, மாட் டுக்கொட்டில், சாம்பல், உமி, ச்மசானம், உப்புமண், நாச்சந்தி, பயிர்நிலம், புதர்கள், அசுத்த ஸ்தலம் முதலிய இடங்களிலும், பசு, நக்ஷத்திரம், பிராம்மணன், புண்யஜலம், சூரியன், சந்திரன், அக்கினி, ஸ்திரீகள், தேவாலயம் இவைகளைப் பார்த்துக்கொண் டும், காலில் பாதரக்ஷையோடும் ஜலமலங்களை விடக்கூடாது. தனது மலத்தைப் பார்க்கக்கூடாது. தவரி பார்த்துவிட்டால் சூரியன், பசு, பிராம்மணனையாவது பார்க்கவேண்டும்.

சௌசக் க்ரமம்.

பிறகு வஸ்திரத்தை உயரத்தூக்கிக்கொண்டு இடது கையி னால் மேகனத்தை பிடித்துக்கொண்டு முன் ஜலம், மண் வைத்தி ருந்த இடத்திற்குப்போய் குந்தி உட்கார்ந்து வலது கையை வலது காலுக்கு வெளியிலும், இடதுகையை இரண்டுகாலுக்கும் நடுவிலும் வைத்துக்கொண்டு முதலில் வலது கையினால் ஜலத் தை இறைத்து இடதுகையினால் மலத்தை அலம்பிவிட்டு பிறகு

* உதயத்திற்கு முந்தி $3\frac{3}{4}$ நாழிகையும், அஸ்தமனத்திற்குப் பிந்தி $3\frac{3}{4}$ நாழிகையும் ஸந்தியா காலமாகும்.

வலது கையினால் மண்ணை எடுத்து இடதுகையில்போட்டு குதத்தை தேய்த்து பிறகு ஜலத்தினால் மண்ணை அலம்பி இடது கையில் ஒரு மண்ணைப்போட்டு ஜலத்தினால் கையை அலம்பி சுத்தி செய்துகொண்டு மறுபடியும் முன்போல் மண்ணைப் போட்டு குதத்தைத் தேய்த்து ஜலத்தை இறைத்து அலம்பி முன்போல் கையையும் அலம்பி இப்படி 6-தடவை மண்ணைப் போட்டு குதத்தை சுத்திசெய்யவேண்டும். பிறகு இடது கையை 2-மண்போட்டு அலம்பிவிட்டு மேகனத்தை 2-மண் போட்டு சுத்திசெய்யவும்.

சௌசத்திற்கு யோக்கியமல்லாத மண்.

மண்ணில்லாமல் சௌசம் செய்யக்கூடாது. ஜலத்தினால் மட்டும் குதத்தை அலம்புவது சுத்தியாகாது.

புத்துமண், எலிபறித்த மண், ஜந்துக்களுள்ள மண், பருக்காங்கல் கலந்த மண், சுடுகாடு மண், அசுத்தம் கலந்த மண், மற்றொருவன் சௌசம்பண்ணி மிகுந்த மண், சுவரிடிந்த மண், உப்புமண், சேறு, தூளி, முதலிய மண்களும் சாம்பலும் கூடாதவைகள்.

இவ்வாறு தோஷமில்லாத சுத்தமான மண்ணைக்கொண்டு சௌசம் செய்தால்தான் சுத்தியாகும். மண் அகப்படாவிட்டால் மணலைக்கொண்டு செய்தால் ஒவ்வொரு அங்கங்களுக்கும் சுத்தியை குதத்தில் 12, மேகனத்தில் 4, இம்மாதிரி இரட்டிப்பாய் மண்ணைப்போட்டு சுத்தியை செய்யவேண்டும்.

இதில் முதல்மண் ஒரு சிரங்கை அளவும் 2வதுமண் அதில் பாதியளவும், 3-வது மண் அதில் பாதியளவும், 4, 5, 6-வது மண்கள் மூன்றாவது மண் அளவுமிருக்கவேண்டும்.

வலதுகையினால் சௌசம் செய்யக்கூடாது. பிறகு முன்புறம் மேகனத்தில் 2-மண்களை முன் அளவுபோல் போட்டு அலம்பவேண்டும்.

பிறகு இடதுகையில் தனித்து 5-மண்களேயும், இரு கைகளேயும் சேர்த்து 5-மண்களேயும்போட்டு ஜலத்தினுல் அலம்ப வேண்டியது. கால்களில் 3-மண்களேப்போட்டு அலம்பவேண்டியது.

ஜலத்தை மாத்திரம் விட்டால் மேகனத்தில் மாத்திரம் 1-மண்போட்டு அலம்பி கையில் ஒரு மண்போட்டு அலம்ப வேண்டும். ஜலமலங்களே விடுவதற்காகப் போய் ஜலமலங்களே விடாத பக்ஷத்தில் அந்தந்த எண்ணிக்கைகளில் பாதி எண்ணிக்கை மண்களேப்போட்டு சுத்தி செய்துகொள்ளவேண்டும்.

ஜலமலங்களுக்குள் எது முந்தி விடப்பட்டதோ அதின் சுத்தியை முன்பு செய்யவேண்டும். எது பிந்தி விடப்பட்டதோ அதின் சுத்தியை பிந்தி செய்யவேண்டும்.

இரண்டும் ஒரே சமயத்தில் விடப்பட்டால் முந்தி மலத்திற்கு சுத்தியை செய்யவேண்டும்.

பிறகு சௌசம் பண்ணின இடத்தை ஜலத்தினுல் அலம்ப வேண்டும்.

நதிகளிலும் புண்ய தீர்த்தங்களிலும் சௌசம் பண்ணக்கூடாது. பாத்திரத்தில் ஜலத்தை எடுத்து சுத்திபண்ண வேண்டும். பாத்திரத்தில் ஜலத்தை எடுத்து சௌசம் பண்ண முடியாத காலத்தில் சிறிய குட்டை கால்வாய்களில் ஜலத்திற்கு முக்கால்முழ தூரம் ஒதுங்கி கரையில் உட்கார்ந்து அசுத்தங்கள் ஜலத்திற்குப் போகாதபடி சௌசம் பண்ணவேண்டும். அப்பொழுது சௌசத்திற்கு வேண்டிய மண்ணே ஜலத்திற்குள்ளிருந்தே யெடுத்துக்கொள்ளவேண்டும்.

ஜலத்தில் அசுத்தம் சேரும்படி ஜலத்தில் உட்கார்ந்து மலத்தை சுத்திசெய்தால் ப்ரும்மஹத்யை-தோஷம் வந்து மஹா நரகம் வரும். ஆகையினுல் ஜலத்திலிருந்து சௌசம் செய்யக்கூடாது. ஒதுங்கி கரையிலேயே உட்கார்ந்து செய்ய வேண்டும்.

பிறகு இடதுகை நகங்களையும் சுத்திசெய்து, கைகால்களையும் முழங்கை முழங்கால் வரையிலும் அலம்பவேண்டியது.

கண்டுஷம்.

பிறகு பாத்திரத்தில் ஜலத்தை எடுத்துக்கொண்டு, மலத்தை விட்டால் ஆறுதடவையும், ஜலத்தைவிட்டால் மூன்று தடவையும் உட்கார்ந்து வாயை கொப்பளித்து இடது பக்கத்தில் தரையில் உமிழவேண்டும். வாய் கொப்பளித்த ஜலத்தை ஜலத்தில் உமிழுவது, கபம் கோழை முதலியவைகளை ஜலத்தில் காறித்துப்புவது மகாபாதகமாகையினால் யமதண்டனைக்குப் பயந்தவர்கள் ஜலத்தில் ஒருவித அசுத்தியையும் செய்யக் கூடாது.

ஆசமனம்.

சுத்தமான இடத்தில் கிழக்கு அல்லது வடக்கு முகமாகவாவது உட்கார்ந்துகொண்டு வலது கையை முழங்கால்களுக்குள் பசுவின் காதுபோல் வைத்துக்கொண்டு தொண்டை வரையிலும் நனையாதபடி உதடும் பற்களின் அடிப்புறம் மட்டும் நனையக் கூடிய கொஞ்சம் ஜலத்தை கைநுனியினால் எடுத்து ஒரே தடவை சாப்பிடவேண்டியது. ஆசமனமாகும். பிறகு கட்டை விரலின் அடிப்பாகத்தினால் 2-தடவை உதடுகளை துடைத்து கட்டைவிரல் ஆள்க்காட்டி விரலினாலும் இரண்டு மூக்குகளையும், கட்டைவிரல் நடுவிரலினாலும் இரண்டு கண்களையும், கட்டை விரல் பவித்ர விரலினாலும் இரண்டு காதுகளையும், கட்டைவிரல் சுண்டுவிரலினாலும் நாபியையும், உள்ளங்கையினால் மார்பையும், எல்லா விரல்களினாலும் தலை தோள்களையும்தொடவேண்டியது.

மற்றும் சில ருஷிகள் சூத்ரர்களுக்கு கைகால்களை அலம்புவது மாத்திரமே ஆசனமாகுமென்கிறார்கள். இரண்டிற்குள் ஒன்றை மலத்தைவிட்டகாலத்தில் 2-தடவையும் ஜலத்தை விட்டகாலத்தில் 1-தடவையும் செய்யவேண்டும்.

பல் துலக்கல்.

கால் கைகளை சுத்திசெய்துகொண்டு சுத்தமான இடத்தில் கிழக்கு அல்லது வடக்கு முகமாக குந்தி உட்கார்ந்து வலது கையை இரண்டு முழங்கால்களுக்குள் வைத்துக்கொண்டு, மௌனமாக இருந்து, இலைகள் இல்லாததாய் பட்டையுள்ளதாய் பால் அல்லது முள் உள்ளதான 4-அல்லது 6-அங்குல நீள முள்ள குச்சியினால் கீழ்வரிசை இடதுபக்கம் ஆரம்பித்து ப்ர தக்ஷிணமாக பல்லை தேய்க்கவேண்டும்.

கூடாத குச்சிகள்.

அரசு, இலுப்பை, பலாசம், முருங்கை, பாக்கு, இலவை, ஈச்சை, செம்பரத்தை, தாழை, பனை, கூந்தல்பனை, தென்னை, முதலிய குச்சிகளாலும், தர்பம், நாணல், கருங்கல், செங்கல், மண், சாம்பல், மணல், வஸ்திரம், நகம், விரல்களினாலும் பல் துலக்கக்கூடாது.

கூடிய குச்சிகள்.

நாயுருவி, நாகை, ஆல், இச்சி, வேம்பு, கருவை, வெள்வேல், மா, அடம்பு, சண்பகம், இலந்தை முதலிய குச்சிகளினாலும், ஷை இலைகளினாலும் பல்துலக்கலாம்.

கூடாத இடம்.

தேவாலயம், புஷ்பத்தோட்டம், யாகபூமி, பசுமாடு கொட்டில், சுடுகாடு, யாகம்பண்ணுமிடம், நடுஜலம் இவைகளிலிருந்து பல் துலக்கக்கூடாது.

நியமங்கள்.

நின்றுகொண்டும், படுத்துக்கொண்டும், ஆஸனத்திலிருந்து கொண்டும், பேசிக்கொண்டும், தெற்குமேற்கு முகமாக யிருந்தும் பல் துலக்கக்கூடாது.

நிஷித்த காலங்கள்.

ப்ரதமை, ஷஷ்டீ, அஷ்டமீ, நவமி, சதுர்த்தசீ, பூர்ணிமை, அமை, வ்யதீபாதம் முதலிய திதிகளிலும், ஞாயர், செவ்வாய், வெள்ளி, சனி, 3-ஜந்ம நக்ஷத்திரங்களிலும், ஏகாதசி முதலிய உபவாச தினங்களிலும் குச்சியால் பல்துலக்கக்கூடாது. கூடாத தினங்களில் ஷை குச்சிகளின் இலைகளினுல் பல்லை துலக்கலாம். எல்லா தினங்களிலும் நாக்கை வழிக்கலாம். தான் ச்ராத்தம் செய்யும் தினத்தில் ஷை இலைகளினுலும்கூட பல் துலக்கவே கூடாது. ச்ராத்த தின்ங்களில் 12-தடவை வாயைமட்டும் கொப்பளிக்கலாம். பல் துலக்க ஒன்றும் அகப்படாத காலத்திலும் 12-தடவை வாயை கொப்பளிக்கவேண்டும். வாயைக் கொப்பளிக்கும்பொழுது ஆள்காட்டி விரலினுல் பல்லைத்தேய்க்க கூடாது. கொப்பளிக்கும் ஜலத்தை சாப்பிடக்கூடாது. பிறகு குச்சியை இரண்டுபாகமாகப் பிளந்து ஒரு பாகத்தினுல் நாக்கை வழித்து மற்றொரு பாகத்தையும் அலம்பி எறிந்துவிட்டு 12-தடவை வாயைக்கொப்பளிக்க வேண்டியது.

பவித்திரம்.

வைதீக காரியங்களில் சூத்திரர்கள் தர்ப மயமான பவித்திரத்தை ஒருகாலும் தரிக்கவேகூடாது. பவித்திரத்திற்கு பதிலாக தங்க மோதிரத்தைப் போட்டுக் கொள்ளலாம். அருகையின் புல்லால் செய்யப்பட்ட பவித்திரத்தை தரிக்கலாம் என்று தக்ஷருஷியின் அபிப்பிராயம்.

ஸ்நாநம்.

ஸ்நாநம்பண்ணுதவன் வைதீகக் காரியங்களைச்செய்ய யோக்யனுகமாட்டான்.

சாஸ்திரம் சொன்ன முறையில்லாமல் தண்ணீரில் முழுகுவது மீன், தப்பளை முழுகுவதுபோல் வ்யர்த்தமாகும். ஆகையினுல் சாஸ்திரம் சொன்ன முறைப்படியே ஸ்நாநம் செய்ய வேண்டும்.

சூரியன் உதித்த பிறகு நதீ முதலான தீர்த்தங்களுக்குப் போய் கால்கைகளை அலம்பிக்கொண்டு கிழக்கு அல்லது வடக்கு முகமாக இருந்து ஆசமனம்செய்து மந்திரமில்லாமல் ப்ருணு யாமம்செய்து அல்லது (ப்ருணுயாமத்திற்காக விஷ்ணுவை த்யானித்து) அஸ்மத்குருப்யோநம: என்று சொல்லி ஸ்ரீபகவ தாக்ஞயா பகவத்ப்ரீத்யர்த்தம் ப்ருத: ஸ்நாநம்கரிஷ்யே என்று பகவத் ப்ரீத்யர்த்தம் ஸ்நாநம் பண்ணுகிறதாக ஸங்கல்பித்துக் கொண்டு, ஆறுகளில் ப்ரவாகத்திற்கு எதிர்முகமாகவும், குளம் முதலியவைகளில் சூரியனுக்கு எதிர்முகமாகவும் இரண்டு வஸ்திரத்துடன், ஹரி: என்றுசொல்லி 3-தடவை மூழ்கி கங்காயை நம: யமுநாயைநம: ஸரஸ்வத்யைநம: ஸேதவேநம: என்று சொல்லி ஸ்நாநம் செய்யும் ஜலத்தில் கங்கை முதலான புண்ய தீர்த்தங்களை ஆவாகனம்பண்ணி அர்க்யம் முதலியவைகளினுல் பூஜித்து அஞ்சலியில் ஷுடி ஜலத்தை எடுத்து 7-தடவை தாந்த்ரிகமான அஷ்டாக்ஷரத்தை ஜபித்து ஷுடி ஜலத்தை தலையில் அபிஷேகம் பண்ணிக்கொண்டு மறுபடியும் அஞ்சலியில் ஜலத்தையெடுத்து முன்போல 7, அல்லது 5, 3-தடவை அபிஷேகம் பண்ணவேண்டியது. பிறகு ஜலத்தில் மூழ்கிக்கொண்டு அஷ்டாக்ஷரத்தை ஜபித்துக்கிளம்பி 2-தடவை ஆசமனம் பண்ண வேண்டும்.

அங்க தர்பணம்.

பிறகு உத்தரீயத்தினுல் உபவீதம் போட்டுக்கொண்டு இடுப்பளவு ஜலத்திலிருந்து அல்லது கரை ஓரத்திலுட்கார்ந்தாவது கிழக்கு முகமாக இருகைகளினுலும் ஜலத்தையெடுத்து தேவான் தர்பயாமிநம: என்றுசொல்லி மூன்று கை ஜலத்தை தேவதீர்த்தத்தினுல் (விரல் நுனிகளினுல்) இறைக்கவேண்டும்.

பிறகு உத்தரீயத்தை நிவீதம் பண்ணிக்கொண்டு வடக்கு முகமாக இருந்து இரண்டு சுண்டுவிரல்களின் நடுவினுலும் ஜலத்தை எடுத்து ருஷீந்தர்பயாமிநம: என்றுசொல்லி ருஷி தீர்த்தத்தினுல் சுண்டுவிரல்களின் நடுவினுல் இரண்டுதடவை இறைக்க வேண்டும்.

பிறகு தெற்குமுகமாகத் திரும்பிக்கொண்டு உத்தரீயத்தை ப்ராசீனவீதமாகப் போட்டுக்கொண்டு (பித்ரு தீர்த்தத்தினால்) கட்டைவிரலுக்கும் அடுத்தவிரலுக்கும் நடுவினால் தீர்த்தத்தை அஞ்சலியாக எடுத்து பித்ரூந்தர்பயாமிநம: என்று 3-தடவை ஜலத்தில் இறைத்து உத்தரீயத்தை உபவீதமாகப் போட்டுக் கொண்டு கரையில் ஒருகாலும் ஜலத்தில் ஒருகாலுமாக வைத்து கொண்டு உட்கார்ந்து ஆசமனம் செய்யவேண்டும்.

வஸ்திர நிஷ்பீடனம்.

பிறகு உத்தரீயத்தை நான்காக மடித்து தலப்புள்ள பக்கத்தினால் அபஸவ்யமாக தனது வம்சத்தில் பிறந்து இறந்து போனவர்களை உத்தேசித்து ஜலத்தை தரையில் பிழிந்து ஆசமனம் செய்து தலைமயிர் ஜலத்தை முன்புறமாகவாவது அல்லது வலதுபுறமாகவாவது கரையில் பிழியவேண்டும். பின்புறமாகவும், இடதுபுறமாகவும் வஸ்திரத்தை பிழியக்கூடாது. பிறகு சுத்தமான உலர்ந்த வஸ்திரத்தினால் தெற்கு முகமாக குந்தி உட்கார்ந்து தலை ஈரத்தைத் துவட்டிவிட்டு மற்றொரு உலர்ந்த வஸ்திரத்தினால் உடம்பை துவட்டவேண்டும். வேறு உலர்ந்த வஸ்திரமில்லாத காலத்தில் ஈரவஸ்திரத்தை 7-தடவை காற்றடிக்கும்படிசெய்தால் அது உலர்ந்த வஸ்திரத்திற்கு ஸமானமாகும். தலையை துவட்டும்பொழுது தலைமயிரை உதரக்கூடாது.

வஸ்த்ர தாரணம்.

பிறகு உலர்ந்த கௌபீனத்தைத் தரித்து மண், ஜலத்தினால் கைகால்களை அலம்பிவிட்டு தலையில் உத்தரீயத்தை சுற்றிக்கொண்டு இடுப்பில் வேறு வஸ்திரத்தைத்தரித்து காலை அலம்பி ஆசமனம் செய்யவேண்டும்.

கௌண ஸ்நானங்கள்.

வ்யாதி முதலான காரணங்களினால் இவ்விதமான முக்கிய ஸ்நானம் பண்ணமுடியாமல் போனால் உஷ்ண ஜலத்தினால்

ஸ்நானத்தை கழுத்துவரையில் குளித்து ஈர வஸ்திரத்தினல் உடம்பை துடைத்துக்கொள்ளுவதாகிற கௌண ஸ்நானத்தைச் செய்யலாம்.

அதிலும் சக்தியில்லாவிட்டால் ஜலத்தினல் இடுப்பு வரையில் நனைத்துக்கொண்டு ஈரவஸ்திரத்தினல் உடம்பை துடைத்துக்கொள்ளலாம்.

அதற்கும் சக்தியில்லாவிட்டால் முழங்கால், முழங்கைகள் வரையில் ஜலத்தினல் அலம்பிக்கொண்டு உடம்பை ஈரவஸ்திரத்தினல் துடைப்பதாவது,

அல்லது விஷ்ணுவை திருவடி முதல் திருமுடி வரையில் த்யானித்து திருவடியிலுண்டான கங்காஜலத்தினல் தான் ஸ்நானம் செய்ததாக நினைப்பதையாவது, மற்றும் சாஸ்திரம் சொன்னகௌண ஸ்நானங்களை எதையாவது செய்யலாம். இந்த கௌண ஸ்நானங்களுக்கும் முன்னும் பின்னும் ஆசமனம் செய்யவேண்டும். கௌண ஸ்நானங்களில் ஈரவஸ்திரத்துடன் தேவருஷிபிதிரு தர்பணம் செய்யக்கூடாது. உலர்ந்த வஸ்திரம் தரித்த பிறகு செய்யவேண்டும்.

ஊர்த்வபுண்டர விதி.

புண்டரமில்லாமல் செய்யும் வைதீக காரியங்கள் வ்யர்த்தமாகும். சுத்தமான இடத்தில் கிழக்குமுகமாகவாவது வடக்கு முகமாகவாவது தேவாலயம், ப்ருமணர்களுக்கு பின்புறத்தை காட்டாமல் உட்கார்ந்து திருமண்ணை இடது கையில் கரைத்து திருமந்திரத்தை ஜெபித்து கேசவாயநம: என்றுசொல்லி நெற்றியில் மூக்கின் அடிமுதல் தலைமயிர் முளைத்திருக்கும் வரையில் விஷ்ணுபாதம் போன்ற புண்டாத்தை நடுவில் இடைவெளியோடும் பக்கங்களில் ஒழுங்காகவும், வலதுகை பவித்திர விரலினலாவது அல்லது ஆள்காட்டி விரலினலாவது இட்டுக்கொள்ள வேண்டியது. ஈர்க்கு முதலியவைகளினல் திருமண் இட்டுக்கொள்ளக்கூடாது. இட்டுக்கொண்ட பிறகு நகத்தினல் திருமண்ணை கீறவும் கூடாது.

பிறகு நாராயணயநம: என்று நடுவயற்றிலும், மாதவாய நம: என்று நடுமார்பிலும், கோவிந்தாயநம: என்று நடுகழுத்திலும், விஷ்ணவே நம: என்று வயிற்றின் வலதுபுறத்திலும் மதுஸூதனயநம: என்று வலது புஜத்திலும், த்ரிவிக்ரமாயநம: என்று வலது கழுத்திலும், வாமனயநம: என்று இடது வயிற்றிலும், ச்ரீதராயநம: என்று இடதுபுஜத்திலும், ஹ்ருஷீகேசாய நம: என்று இடது கழுத்திலும், பத்மநாபாயநம: என்று வயற்றின் பின்புறத்திலும், தாமோதராயநம: என்று கழுத்தின் பின்புறத்திலும் திருமண்ணை இட்டுக்கொள்ளவேண்டியது. மிகுந்த திருமண்ணை சிரசில் தரிக்கவேண்டியது.

பிறகு மஞ்சளினல்செய்த ஸ்ரீசூர்ணத்தைக் கரைத்து ஸ்ரீயை நம: அம்ருதோத்பவாயை நம: கமலாயை நம: சந்தர ஸோதர்யை நம: விஷ்ணுபத்ந்யை நம: வைஷ்ணவ்யை நம: வராரோஹாயை நம: ஹரிவல்லபாயை நம: சார்ங்கிண்யை நம: தேவதேவிகாயை நம: ஸுரஸுந்தர்யை நம: மகாலக்ஷ்ம்யைநம: என்றுசொல்லி நெற்றி துடங்கி வரிசையாய் ஸ்ரீசூர்ணத்தை இட்டுக்கொள்ள வேண்டியது.

திருமண்களின் அளவு.

நெற்றியில் 4-விரல்கடை அளவும், வயிற்றில் 3ம் 10 விரல்கடை அளவும், மார்பிலும், 2புஜத்திலும், 8-விரல்கடை அளவும், கழுத்திலும், பிடரியிலும் 4, விரல்கடை அளவும் நீள மாக இட்டுக்கொள்ளவும்.

பிறகு தனதாசார்யன் துடங்கி பகவான் வரையிலுள்ள அந்தந்த தனியன்களையாவது அல்லது தனதாசார்யன் தனியனை மட்டும் முக்கியமாக அனுசந்தித்து பிறகு அஸ்மத்பரமகுருப்யோநம: அஸ்மத் ஸர்வ குருப்யோநம: என்றுவது, என்னுயிர் தந்தளித்தவரைச் சரணம் புக்கியானடைவே அவர் குருக்கள் நிரைவணங்கி பின்அருளால் பெரும்பூதூர்வந்த வள்ளல், பெரிய நம்பி, ஆளவந்தார், மணக்கால்நம்பி நன்னெறியை அவர்க்

குறைத்த உய்யக்கொண்டார், நாதமுனி, சடகோபன், சேனை நாதன் இன்னமுதத் திருமகளென்றிவரை முன்னிட்டெம்பெருமான் திருவடிகளடைகின்றேனே என்றாவது சொல்லவும். பிறகு துளசீ, தாமரைமணி பவித்ரமாலைகளை நாபிவரையிலிருக்கும்படி தரித்துக்கொள்ளவும்.

ஸ்நானத்திற்கு அங்கமான தேவருஷி பிதிரு தர்பணத்தை ஸ்நான காலத்தில் செய்யாதிருந்தால் அவைகளை முன்புசொன்ன மாதிரியே இப்பொழுது செய்யவேண்டும்.

அர்க்யம்.

இரண்டு கைகளினாலும் ஜலத்தை எடுத்து சூர்யமண்டல ஸ்தாய, பரமாத்மனே நம: என்கிற மந்திரத்தைச் சொல்லி சூரிய மண்டலத்திலிருக்கும் பகவானைக்குறித்து ஓர் அர்க்கியத்தைக் கொடுக்கவும்.

ஜபம்.

பிறகு சுத்தமான இடத்தில் கிழக்குமுகமாக உட்கார்ந்து அர்த்தானுஸந்தானத்துடன் திருமந்திரத்தின் த்யான ச்லோகத்தைச் சொல்லி 1008, 108-தடவை அல்லது முடிந்தவரையில் தாந்த்ரிகமான (ப்ரணவமில்லாத) திருமந்த்ரத்தையும் அப்படியே அந்தந்த த்யான ச்லோகத்தைச்சொல்லி த்வயம், சரம ச்லோகத்தையும் 10-தடவை ஜெபிக்கவேண்டும். அங்கந்யாஸம் முதலியவைகளைச் செய்யக்கூடாது.

நியமம்.

ஜபம் செய்யுங்காலத்தில் நாய், கழுதை, பன்றி, தீண்டாத ஜாதியார் முதலியவர்களைப் பார்க்கக்கூடாது பார்த்தால் உடனே அதற்காக சூரியனைப் பார்க்கவேண்டும். தவிர தும்முவது, வம்புபேசுவது, அபானவாயு விடுவது, மனதை வேறுயிடத்தில் வைப்பது இவைகளைச் செய்யாமல் பகவானை த்யானம்செய்து கொண்டு மௌனமாகவிருந்தே ஜபத்தை செய்யவேண்டும்.

நித்ய தர்பணம்.

பிறகு தேவதைகள், ருஷிகள், பித்ருக்களுக்கு நித்யம் செய்யவேண்டியதான தர்பணத்தை முன்போலவே செய்ய வேண்டும்.

வஸ்திர நிஷ்பீடனம்.

ஸ்நான வஸ்திரத்தை 4-ஆக மடித்து தலப்புள்ள பக்கத்தி னுல் முன்னோர்களைக்குறித்து முன்போல ஜலத்தை கரையில் பிழிந்துவிட்டு ஆசமனம் செய்யவேண்டும்.

நமஸ்கார க்ரமம்.

மனது, புத்தி அபிமானத்தோடு இரண்டு கால்களையும் சேர்த்து நீட்டி இரு கைகளையும் நீட்டி கூப்பி, தலையையும் பூமி யில்வைத்து நமஸ்கரிப்பது அஷ்டாங்க நமஸ்காரமெனப்படும். கீழேபோட்ட தடிக்கம்புபோல் தேகத்தின் முன்புறம் முழுவ தும் பூமியில் படும்படி தரையில் விழுந்து இருகால்களையும் சேர்த்துநீட்டி இருகைகளையும்நீட்டி கூப்புவது தண்டப்ரணமம் எனப்படும். இரண்டுகால்களினுடைய விரல்களினுலும், இரண்டு முழங்கால்களினுலும், தலையினுலும் பூமியைத்தொட்டு கையை கூப்புவது பஞ்சாங்க நமஸ்காரம் எனப்படும். இருகைகளை சேர்த்துக்கூப்புவது அஞ்சலி எனப்படும். அஷ்டாங்கம் தெண் டம் பஞ்சாங்கமென்கிற நமஸ்காரங்களையும், ப்ரதக்ஷிணங்களை யும், 2, 4, 6, 8-இப்படி இரட்டைப்படையாகவே செய்யவேண் டும். 1, 3, 5, 7-இவைபோன்ற ஒற்றைப்படையான ப்ரதக்ஷிண நமஸ்காரங்களை செய்யக்கூடாது.

அஷ்டாங்கம் தண்டம் என்கிற நமஸ்காரங்களைச் செய்கிற வன், மஸ்திஷ்கம், ஸம்புடம், ப்ரஹ்வாங்கம் என்கிற 3-வித அஞ்சலிகளையும், சேர்த்தேசெய்யவேண்டும். அதாவது பூமியில் விழுந்து தண்டனிட்ட பிறகு யெழுந்திருந்து தனது தலையின் மேல் இருகைகளையும் கூப்புவது மஸ்திஷ்கம். பிறகு மார்பிலிரு கைகளையும் கூப்புவது ஸம்புடம். கூப்பின கைகளோடு ஸர்வாங் கங்களையும், தலையையும் குனித்துக்கொள்வது ப்ரஹ்வாங்கம்.

ஆக பூமியில் விழுந்து ஸேவித்து இம்மூன்று அஞ்சலிகளை யும் செய்தால்தான் பூர்ண நமஸ்காரமாகும். இவைகளைச் செய் யாவிட்டால் அஷ்டாங்க தண்ட ப்ரணமங்கள் பூர்ண நமஸ்கா ரங்கள் ஆகமாட்டா.

ப்ரோக்ஷணம்.

பிறகு பாத்திரத்தை சுத்திசெய்து ஜலத்தை எடுத்துக் கொண்டு வீட்டிற்குவந்து ஷை ஜலத்தினல் க்ரஹத்தை ப்ரோ க்ஷிக்கவேண்டும்.

பிறகு, தான் ஆருதிக்கும் பகவானுடைய ஸன்னதியில் போய் மெழுகி கோலமிட்டு திருவிளக்கு ஸமர்ப்பித்து, நமஸ் கரித்து யதாசக்தி ஸ்துதித்து அர்ச்சித்து, தன்னையும் தன்னு டைய ஸர்வ வஸ்துக்களையும் தேவரீர் கைங்கர்யார்த்தமாக திரு வுள்ளம் பற்றவேண்டுமென்று பிரார்த்திக்க வேண்டும்.

மங்களவீக்ஷணம்.

பிறகு தங்கம், கண்ணடி, அக்னி, சூரியன், கன்றுள்ளபசு, வ்ருஷபம், சந்தனம், வாத்தியம், வெள்ளை புஷ்பம் முதலிய மங்கள வஸ்துக்களை பார்க்கவும்.

கோக்ரஸம்.

பிறகு கொஞ்சம் புல்லை பிடுங்கி பிறருடைய பசுமாட்டுக்கு (மந்திரம்) சௌரபேய்ய: ஸர்வஹிதா: பவித்ரா: பாபநாசனு: ப்ரதிக்ருண்ணந்த்விமம் க்ருஸம் காவ: த்ரைலோக்யமாதர: யென்று சொல்லி புல்லை கொடுக்கவும். பசுவுக்கு சொரிந்து கொடுக்கவும்.

பிறகு பகவானுடைய பூஜார்த்தமான புஷ்பங்கள் பத்ரங் கள் ஆராதனத்துக்காகக்கூடிய காய்கரி முதலியவைகளையும் கொண்டுவ்ரவும். மற்றும் க்ருஷி, சில்பம் முதலான லௌகிக குடும்ப காரியங்களையும் பகவானுடைய கைங்கர்யமாகவே நினைத்து செய்யவும்.

பகவானுடைய ஆராதனத்துக்கென்றே தனது பூமியில் தன்னல் உண்டுபண்ணப்பட்ட பத்ர புஷ்பங்கள் உத்தமம். காடுகளிலிருந்து தன்னல் கொண்டுவரப்பட்டப்த்ர புஷ்பங்கள் மத்யமம். க்ரயத்திற்கு வாங்கப்பட்டதும் பிறரைக்கேட்டு இனமாக வாங்கிவந்ததும் அதமம்.

கூடாதவை.

திருடிக்கொண்டு வந்தது அதமாதமம். தீண்டாத ஜாதியார், நாஸ்திகன், ம்லேச்சர்களுடையதும், பதிதன், நாய், பன்றி கழுதை, முதலிய அனுசார ஜந்துக்கள் தொட்டதும், புழுக்களுள்ளதும், முள்ளுள்ளதும், தரையில் விழுந்ததும், வாடினதும், முகந்து பார்த்ததும், சிகப்பு அரளி, வாகை, விளா, முருங்கை, இலவை, செம்பரத்தை, எருக்கு, ஊமத்தை, அடம்பு, மருதை, புளி, சுறை, பீர்க்கை முதலிய புஷ்பங்களும் விஷ புஷ்பங்களும், கருப்புநிறமுள்ள புஷ்பங்களும், இரண்டு தினத்திற்கு மேற்பட்ட புஷ்பங்களும் மற்றும் சாஸ்திர நிஷித்தங்களான புஷ்பங்களும் கூடாதவைகள்.

ஆராதனத்திற்கு யோக்ய புஷ்பங்கள்.

தங்கமயமான புஷ்பங்களும், தாமரை, செங்கழுநீர், நெய்தல், ஜாதி, மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, தாழை, கொக்கு மந்தாமரை, நந்தியாவட்டை, ஆம்பல், சம்பகை முதலிய புஷ்பங்களும்.

பத்ரங்கள்.

நாயுருவி, வில்வம், அரசு, பலாசம், வள்ளி இவைகளுடைய பத்ரங்களும் பூஜைக்கு யோக்யங்கள். துளஸியை ஸத்சூத்ரர்கள் யெடுக்கலாமென்றாவது கூடாதென்றாவது நிச்சயிக்க முடியாத்தினால் அதை இங்கு எழுதவில்லை.

காலக்ஷேபம்.

இப்படி பகவானுடைய ஆராதனத்திற்கு வேண்டிய வஸ்துக்களை சேகரித்த பிறகும், அல்லது ஷிவஸ்துக்களை புத்ரன் முதலானவர்களைக்கொண்டு ஸம்பாதிக்க கூடுமானாலும் ஷிகாலத்தில் தனது ஆசார்யனிடத்திலாவது அல்லது மற்றை பகவத் பக்தர்களான ஞானவான்களிடத்திலாவது ஞானம், அனுஷ்டானம், வைராக்யம், பகவத்பக்தி இவைகளை வ்ருத்தி பண்ணக்கூடிய க்ரந்த காலக்ஷேபங்களைச் செய்யவும், முன்பு செய்தவைகளை மறுபடியும் சிந்திக்கவும் செய்யவேண்டும். வீண்வார்த்தை முதலியவைகளினால் காலத்தை வ்யர்த்தமாக்கக் கூடாது.

ஆராதனம்.

பிறகு 12-நாழிகைக்குமேல் முன்போல ஸ்நானத்தைப் பண்ணி அல்லது கைகால்களை அலம்பி ஆசமனம்செய்து தங்கள் தங்கள் ஆசார்யன் உபதேசித்த கிரமப்படி பகவானை ஆராதிக்க வேண்டும். இது உபதேசிக்கவேண்டிய விஷயமானதால் இங்கு க்ரமம் எழுதப்படவில்லை. சூத்ரர்கள் ஸாளக்ராமத்தை தொட்டு பூஜிக்கக்கூடாது. உலோகங்களினல் செய்யப்பட்ட விக்ரஹத்தையாவது அல்லது சித்ர ரூபமான படங்களையாவது தெரிந்த பிரமணனை பெரியோர்களைக்கொண்டு தாந்திரிகமாக ப்ரதிஷ்டையைச் செய்வித்து வாங்கிவைத்துக்கொண்டு அவ்விக் ரஹத்தைசக்திக்கு அனுகுணமாக அலங்கரித்து சாஸ்திர நிஷித் தங்களான வஸ்துக்களைவிட்டு சாஸ்திர ஸம்மதங்களான வஸ் துக்களைக்கொண்டு மிகுந்த பக்தியோடு அர்க்கியம், பாத்யம், ஆசமனம், கந்தம், தூபம், தீபம், புஷ்பம், நைவேத்யம் முதலிய வைகளினல் பூஜித்து ஷை தீர்த்தம், சந்தனம், புஷ்பங்களை தரித்து ஸந்துஷ்டனய் கானத்தோடு ஸ்தோத்திரம் பண்ணி நமஸ்கரித்து அடியேன்செய்த அபராதங்களை பொறுத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்து திருக்காப்பு ஸமர்ப்பித்து ஆச மனம் செய்யவேண்டும். ஒரே இடத்தில் பாகம்பண்ணுகிற ஓர் குடும்பத்தில் ஒருவர் ஆராதனம் பண்ணினல் போரும். மற்றவர்கள் ஆராதனத்திற்கு வேண்டியவைகளான உசிதகைங் கர்யங்களைச்செய்து தீர்த்தம் ப்ரசாதங்களை ஸ்வீகரித்தால் அவர் களும் பகவானுடைய ஆராதனத்தைச் செய்ததாகும்.

வைச்வதேவம்.

உலகத்தில் ஒவ்வொரு மனிதனும் ஐந்துவிதமான ப்ராணி ஹிம்சைகளை அவச்யம் செய்தே தீரவேண்டியதாயிருக்கிறது. அதாவது:—

1. அடுப்பில் விறகுகளைவைத்து எரிப்பதால் அதிலிருக் கும் எறும்பு, புழுக்களுக்கு ஹிம்சை உண்டாகிறது.

2. வளர்ந்துகொண்டிருக்கும் கீரை முதலிய கறிகாய்களை பிடுங்கி அறிவாள்மணையில் வைத்து துண்டம் துண்டமாக வெட்டுவதால் அவைகளுக்கு ஹிம்சை உண்டாகிறது.

3. ஜலத்தை சாப்பிடும்பொழுதும், ஜலத்தை வென்னீராக காய்ச்சுகிற காலத்திலும் கண்ணுக்குத்தெரியாத பூச்சிகளுக்கு ஹிம்சை உண்டாகிறது.

4. பற்பல தான்யங்களை உரல், உலக்கை, அம்மி, குழவிகளினல் இடித்து அறைக்கும்பொழுது பல ஜந்துக்களுக்கு ஹிம்சை உண்டாகிறது.

5. வீட்டை பெருக்கி மெழுகும் பொழுதும் பற்பல ப்ராணி ஹிம்சை உண்டாகிறது.

இவை மற்றும் நாம் நடக்கும்பொழுது காலில் அகப்பட்டு நசுங்கிப்போவது முதலிய ப்ராணிகளின் ஹிம்சைகளுக்கும் உபலக்ஷணம்.

இவ்வாருன ப்ராணிஹிம்சைகள் யெல்லா மனிதர்களுக்கும் அவச்யம் செய்யவேண்டியதாக இருப்பதால் அந்த பாபங்களுக்கு ப்ராயசித்தமாகவே, வைச்வதேவம் பஞ்சமஹாயக்ஞமென்கிற காரியங்கள் சாஸ்திரங்களில் அவச்யம் செய்யவேண்டியதாக விதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஹிம்சைகளுக்கு ப்ராயசித்தத்தை ஸத்சூத்ரர்களும் அனுஷ்டிக்கவேண்டுமென்று மனு முதலான மகர்ஷிகள் விதித்திருந்தாலும், ஸத்சூத்ரர்களுக்கு வைச்வதேவம் சாஸ்திரங்களில் சொல்லப்படவில்லை. பஞ்சமஹாயக்ஞம் மட்டுமே விதிக்கப்பட்டிருக்கிறது. ஷுயக்ஞம் இரவில் கூடாதாகையினல் பகலில் மாத்திரம் செய்யவேண்டும்.

பஞ்சமஹா யக்ஞம்.

ஸத்சூத்ரர்கள் பக்வமான அன்னத்தைக்கொண்டு யக்ஞம் செய்வதை நிஷேதித்திருப்பதால் பக்வமில்லாத அரிசி முதலானவற்றினல் ஷுயக்ஞத்தை அனுஷ்டிக்கவேண்டும். அதற்கு சக்தியில்லாதவர்கள் ஷு யக்ஞங்களை அனுஷ்டிக்கும் பிராமணர்களுக்கு சக்திக்குத்தகுந்தபடி தானம் செய்யவேண்டும்.

ஷு ப்ரயோகம்.

கால் கைகளை அலம்பி ஆசமனம்செய்து பிராணயாமம் செய்து ஸ்ரீபகவதாக்ஞயா பஞ்சசூநாதோஷ ப்ராயச்சித்தம் பஞ்சமகாயக்ஞம் கரிஷ்யே என்று ஸங்கல்பித்து பாகம் பண்

ணின அக்கினிக்கு எதிரில் உட்கார்ந்து அக்னயே நம: என்று அக்னியை நமஸ்கரித்து அக்னியில் ஓர் ஸமித்தைப்போட்டு ஜலத்தினுல் அக்னியைப் ப்ரதக்ஷிணமாகச் சுற்றி, பிறகு தேவ யக்ஞம்கரிஷ்யே என்று ஸங்கல்பித்துக்கொண்டு அரிசியில் நெய் யைக் கலந்து நெல்லிக்காய் அளவுள்ள அரிசியை யெடுத்து தேவதாப்ய: பித்ருப்யச்ச மகாயோகிப்ய ஏவச நம: ஸ்வதாயை ஸ்வாஹாயை நித்யமேவநமோநம: என்கிற மந்திரத்தைச் சொல்லி அக்னியில் ஹோமம்செய்து தேவேப்ய இதம்நமம என்றுசொல்லி அக்னியில் ஓர் ஸமித்தைப்போட்டு அக்னியை ஜலத்தினுல் சுற்றி, உத்தரீயத்தினுல் ப்ராசீனவீதம் போட்டுக் கொண்டு பிறகு, பித்ருயக்ஞம்கரிஷ்யே என்று ஸங்கல்பித்து பித்ருப்ய: ஸ்வதாநம: என்றுசொல்லி அக்னிக்கு தென்புறமாக ஓர் பலியை பித்ருதீர்த்தத்தினுல் பூமியில்வைத்து பித்ருப்ய இதம்நமம என்றுசொல்லி பிறகு உபவீதம் போட்டுக்கொண்டு பூதயக்ஞம்கரிஷ்யே என்று ஸங்கல்பித்து ஸர்வபூதேப்யோநம: என்று ஓர் பலியை பூமியில்வைத்து பூதேப்யஇதம்நமம என்று சொல்லி பிறகு மனுஷ்யயக்ஞம்கரிஷ்யே என்று ஸங்கல்பித்து மனுஷ்யேப்யோநம: என்று ஓர்பலியை பூமியில்வைத்து மனுஷ் யேப்யஇதம் நமம என்றுசொல்லி பிறகு வெளியில்போய் ச்வப் யாம்நம: என்று ஓர் பலியை பூமியில்வைத்து ச்வப்யஇதம் நமம என்று சொல்லி பிறகு வாயஸேப்யோநம: என்று ஓர் பலியை பூமியில்வைத்து வாயஸேப்யஇதம்நமம என்று சொல்லி, காலை அலம்பி ஆசமனம்செய்யவேண்டும். இப்படி அக்னியில்ஹோமம் செய்யமுடியாத காலங்களில் அந்தந்த மந்திரங்களைச்சொல்லி ஜலத்தினுல் தர்பணத்தையாவது அவச்யம் செய்யவேண்டும்.

பிறகு ஆசமனம் பிராணுயாமத்தைச் செய்து ப்ரம்மயக் ஞம்கரிஷ்யே என்று ஸங்கல்பித்துக்கொண்டு இடது முழங்கா லின்மேல் வலதுகாலையும் வலது முழங்காலின்மேல் வைத்த இடது கைமேல் வலது கையையும் வைத்துக்கொண்டு ருக்வேதாயநம: யஜுர்வேதாயநம: ஸாமவேதாயநம: அதர்வண வேதாயநம: சிக்ஷாயை நம: வ்யாகரணுய நம: சந்தஸேநம: நிருக்தாயநம: ஜ்யோதிஷாயநம: கல்பாயநம: ப்ரம்மவித்யாயை நம: இதிகாச புராணேப்யோ நம: என்றுசொல்லி (தேவதாப்ய — ம:) என்று மூன்றுதடவைசொல்லி "வித்யாத்வத்தபோயோ

நிறயோ நிர்விஷ்ணுரீடித: வாக்யக்ளேஶ நார்ச்சிதோதேவ: ப்ரீயதாம்மே ஜநார்த்தன:" என்று சொல்லிவிட்டு ஆசமனம்செய்ய வேண்டியது.

பிறகு அதிதிகளுக்காக சற்று காத்திருக்கவேண்டியது.

போஜன விதி.

பிறகு சாப்பிட உட்காருவதற்குமுன் கால்கைகளை நன்றாக அலம்பி ஆசமனம்செய்து சுத்தமான இடத்தில் கிழக்கு தெற்கு முகமாகவாவது உட்கார்ந்து எதிரில் பாதி சந்திரன்போல கோமய ஜலத்தினால்மெழுகி அல்லது ஷெடிஜலத்தினால் ப்ரோக்ஷித்தாவது அதில் தங்கம், வெள்ளி அல்லது 52-பலம் கனமுள்ள வெண்கலப் பாத்திரத்தையாவது ஆல், அரசு முதலிய நிஷித்தங்கள் தவிர வாழை, பிலா, மா, தென்னை, பலாசம், தாமரை, பேயத்தி முதலிய இலைகளையாவ்து ஜலத்தினால் அலம்பிபோட்டு தான் உட்கார்ந்த பிறகு பகவானுக்கு நிவேதனம்பண்ணின அன்னத்தை கரண்டியினால்போட்டு நெய் அல்லது நல்ல எண்ணையையாவது சேர்த்து இடதுகை கட்டைவிரல் அடுத்த 2-விரல்கள் ஆக மூன்று விரல்களினால் இலையைப் பிடித்துக் கொண்டு பாத்ய தீர்த்தத்தை வாங்கி சாப்பிட்டு வலதுகை கட்டைவிரல், நடுவிரல், பவித்ரவிரல் ஆக 3-விரல்களினால் அன்னத்தையெடுத்து நம: என்றுசொல்லி ஐந்து கபளத்தை வாயில்போட்டு விழுங்கி இடதுகையை அலம்பிவிட்டு பிறகு வ்யஞ்சனங்களுடன் ஒவ்வொரு கபளத்தையும் கோவிந்தா என்றுசொல்லி சாப்பிடவேண்டும்.

சாப்பிட்ட பிறகு முன்போல பாத்ய தீர்த்தத்தை வாங்கி பாதி சாப்பிட்டு மிச்சஜலத்தை "ரௌரவே பூயநிலயே பத்மார்புதநிவாஸிநாம் அர்த்தினாமுதகம் தத்தம் அக்ஷய்யமுபதிஷ்டது" என்கிற மந்திரத்தைச்சொல்லி இடது பக்கத்தில் பூமியில் விடவும்.

நியமங்கள்.

ஆசாரமில்லாதவர்கள் சொத்தையும் ஷியார் தொட்டதையும் கையினாலும். இரும்புக் கரண்டியினாலும் பரிமாரின அன்ன வ்யஞ்சனத்தையும் சாப்பிடக்கூடாது. வீண்வார்த்தை சொல்லுவது சிறுவர்கள் ஸ்திரீகளுடன் ஒரே பங்க்தியில் உட்கார்ந்து

சாப்பிடுவது பத்னீ, சிறுவர்களை கோபித்துக்கொள்வது அன்னம் வ்யஞ்சனங்களை தூஷிப்பது இடதுகையினால் சாப்பிடுவது இலையைவிட்டு வலதுகையைத் தூக்கிக்கொள்வது, இடதுகையை பூமியில் ஊன்றுவது, நாய், பன்றி முதலியவைகளை பார்ப்பது, தீண்டாத ஜாதியார்களை பார்ப்பது, அவர்கள் பார்த்ததை சாப்பிடுவது, கடித்துவைத்த குறையை சாப்பிடுவது, எச்சில் கையில் ரஸம், மோர் இவைகளை வாங்கி சாப்பிடுவது, தேவாலயம், பாழ்வீடுகளிலும், ஸந்த்யா காலத்திலும், நடு நிசியிலும், நடந்து கொண்டும், நின்று கொண்டும், படுத்துக் கொண்டும், இடதுகையில் ஆகாரத்தை வைத்துக்கொண்டும் சாப்பிடுவது, சாப்பிடாதவர்கள் பார்த்திருக்கச் சாப்பிடுவது, பகவானுக்கு நிவேதனம் செய்யாததைச் சாப்பிடுவது முதலான சாஸ்திர நிஷித்தங்களைச் செய்யக்கூடாது. போஜன காலத்தில் பாத்திரத்திலிருக்கும் ஜலத்தை இடது கையினால் சாப்பிடலாம். மற்றைய காலத்தில் வலது கையினாலேயே சாப்பிடவேண்டும். ப்ரஸவித்தவள், ருதுவானவள், தீண்டாத ஜாதியார் முதலியவர்களுக்கு கொடுத்து மிகுந்த அன்ன வ்யஞ்சனங்களையும் சாப்பிடக்கூடாது.

நபும்ஸகர்கள், தன்ஜாதி தர்மத்தை விட்டவன், வ்யபிசாரி, சத்ரு, மகாபாதகிகள் இவர்களுடைய அன்னத்தையும் மற்றை வஸ்துக்களையும் அவை தானாக வந்ததானாலுங்கூட உபயோகப் படுத்தக்கூடாது. மற்றும் காலம், தேசம், நிமித்தம், ஸம்பந்தம் முதலிய தோஷங்களுள்ளவைகளையும் பெரியோர்களைக்கேட்டுத் தெரிந்து விட்டுவிடவேண்டியது.

அதிதி, குழந்தைகள், கிழவர்கள், ரோகிஷ்டன், கர்பிணிகள், பர்த்தாவின் வீட்டிலிருந்து வந்திருக்கும் பெண்கள் இவர்களை முந்தியே சாப்பிடச்செய்யவேண்டும். பசியினால் வருந்தி வந்த அதிதியானவன் யெந்தஜாதியானாலும் அவனுக்கு அன்புடன் அன்னமிடவேண்டும். ஆனால் ஒருவனே தினந்தோறும் வந்தால் அவனுக்கு அன்னம் கொடுக்காவிட்டால் பாதகமில்லை.

ஆனால் வீட்டிற்குவந்த அதிதி பகவத் பக்தனானால் பகவானுக்கு நிவேதனம்செய்த அன்னத்தையும், பகவத் பக்தனல்லாதவனாகில் நிவேதனம்பண்ணாத அன்னத்தையும் போட

வேண்டும். அன்னமில்லாவிட்டால் மற்றும் சாப்பிடக்கூடிய எந்தவஸ்துக்களையாவது, ஜலத்தையாவது படுத்துறங்க பாயை யாவது, இடத்தையாவது, இன்சொல்லையாவது கொடுத்து வந்த அதிதியை அவச்யம் உபசரிக்கவேண்டும். அதிதியிடத்தில் கடும்பார்வை, கடும்சொற்கள் மற்றும் ச்ரத்தை குறைவுகளைச் செய்யக்கூடாது.

ஸ்நேகிதன், பந்துக்கள், தனிகன், அரசனைச்சேர்ந்தவன், இவர்கள் அதிதியாகமாட்டார்கள். தன்னோடு ஒருசம்பந்தமில் லாமல் ஆகாரத்திற்காக வந்தவனே அதிதியாவான். பசித்து வந்தவன் சண்டாளனானாலும் அவனுக்கும் அவச்யம் அன்னம் கொடுக்கவேண்டும். அஸ்தமனவேளையில் வந்த அதிதியை அவச்யம் கஷ்டப்பட்டாவது உபசரிக்கவேண்டும். இரவில் ஒருவனுக்கு அன்னமிடுவது ஆயிரம் பேருக்கு அன்னமிட்ட தோடு ஸமமாகும்.

இப்படி சாப்பிட்ட பிறகு எழுந்திருந்து வெளியேபோய் வலதுகையை இடதுகையினால் சுத்தமாக தேய்த்து நகங்களை யும் அலம்பி 12-தடவை வாயைக் கொப்பளித்து கால்களையும் நன்றாகஅலம்பி 2 தடவை ஆசமனம்பண்ணி இரண்டுமுழங்கால் களையும் தொட்டு மறுபடியும் ஆசமனம்செய்து "அகஸ்திரக்நி: படபாநலச்ச புக்தம்மயாந்நம் ஜரயத்வசேஷம் சுகம் மமைதத் பறிணமஸம்பவம் யச்சத்வரோகோமமசாஸ்துதேக:" என்று சொல்லி வயிற்றைத் தொடவேண்டும். க்ருஷ்ணபக்ஷம் அஷ்டமீ, சதுர்த்தசிகளில் பகலிலும், ஏகாதசிகளில் பகலிலும் இரவிலும் சாப்பிடக்கூடாது. கிழவன் ரோகமுள்ளவன் அசக்தன் பால், பழம், கிழங்கு முதலியவற்றை கொஞ்சம் சாப்பிடலாம். துவாதசியில் காலையில் நித்யகர்மங்களை முடித்துக்கொண்டு பகவானுடைய ஆராதனத்தைச்செய்து 6-நாழிகைக்குள் சாப்பிட வேண்டும். த்வாதசியில் பிறருக்கு அன்னதானம் பண்ணுவது உயர்ந்த புண்ணியமாகும்.

தாம்பூலம்.

வெற்றிலையின் சுற்றுப்புறம் அடி, நுனி, நடு நரம்புகளை யெடுத்துவிட்டு பின்புறத்தில் சுண்ணாம்பைத் தடவி முதலில்

வெற்றிலையை வாயில்போட்டு பிறகு பாக்கை சாப்பிடவேண்டும். சுண்ணும்புவைத்த வெற்றிலையை சாப்பிடக்கூடாது. ஏகாதசி முதலிய வ்ருத தினங்களிலும் ச்ராத்த தினத்திலும், ச்ராத்தத்திற்கு முதல் தினத்திலும் வெற்றிலையை சாப்பிடலாகாது. பிறகு வாயைக்கொப்பளிக்கவேண்டும்.

இதிகாஸம்.

பகலில் தூங்கக்கூடாது. இதிகாஸ புராண கதைகளைக் கேட்கவாவது அல்லது ஆழ்வார்களுடைய சூக்திகளை அனுஸந்திக்கவாவது அல்லது பகவானுக்கு நந்தவனம் முதலிய பகவத் பாகவத கைங்கர்யங்களையாவது அவசியமான குடும்ப காரியங்களை பார்க்கவாவது செய்யலாம். சூரியன் அஸ்தமன காலத்தில் தூங்கக்கூடாது. சாயங்காலத்தில் கை கால்களை அலம்பிக்கொண்டு, தான் பூஜிக்கும் பகவானுடைய ஸன்னதியில் தீபம் வைத்து நமஸ்கரித்து அர்ச்சித்து தோத்திரங்களைச் செய்து ஸந்த்யாகாலத்திற்குப்பிறகு பக்வமான அன்னத்தை நிவேதனம் செய்து முன்புசொன்ன நியமங்களோடு சாப்பிடவும்.

ச்ருத்தத்திற்கு முதல்நாள் ச்ருத்ததினம் அமை பூர்ணிமை இரவுகளில் சாப்பிடக்கூடாது. முடியாவிட்டால் பலகாரம் சாப்பிடவும். இரவில் எள்ளு, பயறு கலத்ததையும், இஞ்சி, நெல்லிக்காய், தனியான தயிர் இவைகளையும் சாப்பிடக்கூடாது.

தேவாலய ஸேவை.

ஸாயங்கலங்களில் ஸமீபத்திலிருக்கும் தேவாலயங்களுக்குப்போய் பகவானை சாஸ்திரப்படி ஸேவிக்கவும். தேவாலயத்துள் தும்புவது, தூங்குவது, வம்புபேசுவது, உண்ணுவது, அபானவாயு விடுவது முதலிய அபசாரங்களைச் செய்யாமல் பகவானுடைய ஸ்தோத்திரங்களைச் சொல்லிக்கொண்டு ஆலயத்துள் ப்ரவேசித்து த்வஜஸ்தம்பத்தினடியில் 'கூர்மாதீன்' என்கிற ச்லோகத்தைச்சொல்லி அஷ்டாங்க நமஸ்காரங்களைப் பண்ணி ப்ரகாரத்தில் 4-மூலைகளிலும் நமஸ்கரித்து விஷ்வக்ஸேநர் துவார பாலர்களையும் நமஸ்கரித்து பிறகு பகவானையும் நமஸ்கரித்து பகவானுடைய வலது புறத்தில் நின்றுகொண்டு பகவானுடைய திருவடி முதல் திருமுடி வரையில் ஒவ்வொரு அங்கங்களும்

நெஞ்சில் ஸ்திரமாக நிற்கும்படி ஸ்திரமான மனதுடன் அனுபவித்து தெரிந்த ஸ்தோத்திரங்களினால் துதித்து க்ருதார்த்தமான மனதுடன் தீர்த்தம், சடகோபன், துளசி, புஷ்பம், சந்தனங்களை பக்தியோடுபெற்று தனது பின்புறத்தை பகவானுக்கு காட்டாமல் வெளியேவந்து ஸன்னதியில் ஓரிடத்திலுட்கார்ந்து முடிந்தவரையில் திருமந்திரத்தை ஜெபித்து நமஸ்கரித்து அடியேன் செய்தவபசாரங்களைப் பொறுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்து ப்ரதக்ஷிணங்களைப்பண்ணி விஷ்வக்ஸேநரை ஸேவித்து விடைபெற்று பகவானையே த்யானித்துக்கொண்டு வீட்டிற்கு வரவேண்டும். பகவத் ஸன்னிதியில் மற்றொருவரையும் ஸேவிக்கக்கூடாது. பாகவதர்களைக் கண்டால் உசிதமான உபசாரத்தை செய்யலாம்.

பிறகு கைகால்களை சுத்திசெய்து ஆசமனம் பண்ணிவிட்டு தூக்கம் வரும்வரையில் பகவானுடைய ஸ்தோத்திரங்களைச் சொல்லிக்கொண்டிருந்து க்ஷீராப்திநாதனை த்யானித்துக்கொண்டு படுத்துறங்கவும். இரவில் தூக்கம்விழித்த காலங்களில் ஸ்தோத்திரங்கள் பாசுரங்களையாவது அல்லது திருநாமங்களையாவது சொல்ல வேண்டும்.

ஸங்கமம்

சாஸ்திர நிஷேதங்களில்லாத காலங்களில் ரோகம் அசக்தி இல்லாத தனது பத்னியோடு ஸங்கமம் செய்யலாம்.

ஷி நியமங்கள்.

ஸ்த்ரீகளுக்கு ரஜஸ் உண்டான தினம்முதல் 16-தினங்கள் ருதுகாலமென்று சொல்லப்படும். அவற்றுள் முதல் மூன்று தினங்களில் அவர்களுக்கு 18-அடி தூரம் விலகி வஸிக்கவேண்டும். அக்காலத்தில் அவர்களோடு பேசவும்கூடாது. 4-வது தினத்திலும் அவர்களோடு சங்கமம்செய்யக்கூடாது. பாக்கி 12 தினங்களிலும் ஷஷ்டி, அஷ்டமீ, சதுர்த்தசீ, அமை, பூர்ணிமை, ஏகாதசீ, முதலிய வ்ருததினங்கள், மாதப்பிறப்புகள், சனி, ஞாயர், செவ்வாய், ஜன்மத்ரயம், ச்ராத்தத்திற்கு முதல்தினம், ச்ராத்ததினம், பகல், ஸந்த்யை காலம், நடுநிசி முதலிய நிஷித்த காலங்களிலும் ஸங்கமம் செய்யக்கூடாது. ருது காலங்களில் 6, 8, 10, 12, இம்மாதிரி இரட்டைப்பட்ட தினங்களில் சங்கமம்

செய்யவேண்டும். பிறகு 3-மண்போட்டு மேகனத்தை அலம்பி விட்டு வேறு படுக்கையில் படுத்துறங்கவும். ருதுகாலத்தில் ஸங்கமம்செய்த புருஷன் ஸ்நானம் பண்ணவேண்டும். மற்றைய நாளானால் ஸ்நானம் வேண்டியதில்லை. ஸ்த்ரீகளுக்கு எக்காலத்திலும் இதற்காக ஸ்நானம்வேண்டியதில்லை. ஓரிரவில் இரண்டு தடவை சங்கமம் செய்யக்கூடாது.

க்ஷௌரம்-அப்யங்கம்.

ஸத்சூத்ரர்கள் மாதத்திற்கு ஒருமுறை க்ஷௌரம் செய்து கொள்ளலாம். ஆனால் ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி மாதங்களிலும் மற்றை மாதங்களிலும் ஷஷ்டி, ஏகாதசீ, வ்ருததினம், துவாதசீ, அஷ்டமீ, சதுர்த்தசீ, அமை, பூர்ணிமை, க்ரகணம், ப்ரதமை, வ்யதீபாதம், மாதப்பிறப்புகள், த்ரிஜந்மங்கள், ஞாயர், செவ்வாய், சனி, வாரங்களிலும் யெல்லா வ்ருத தினங்களிலும் ச்ராத்ததினம், அதற்கு முதல்தினம், மாதா பிதாக்களுடைய மரணவருஷங்களிலும், பத்னி கர்ப்பிணியாகி 3-மீத்திற்குப்பிறகும் சூரியன் உதித்த 2-நாழிகைக்குமுன்பும் இரவிலும்,சந்த்யையிலும் க்ஷௌரம் செய்துகொள்ளக்கூடாது.(இவற்றுள் சனிக்கிழமை, பத்னி கர்ப்பிணியாயிருக்குங்காலம் ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி மாதங்கள்கள் தவிர மற்றை தினங்களில் எண்ணை தேய்த்துக் கொள்ளக்கூடாது. தீபாவளி தவிர மற்றைய நாள்களில்காலை 6-நாழிகைக்குள் எண்ணை தேய்த்துக்கொள்ளக்கூடாது.

க்ஷௌரம் செய்துகொண்டால் வென்னீரிலும் கிணற்றிலும் ஸ்நானம் செய்யக்கூடாது. ஆறு குளங்களுக்குப்போய் ஒரே ஸமயத்தில் 13-தடவை ஜலத்தில் அமிழ்ந்து மூழ்கி தலை உடம்புகளை துடைத்துக்கொண்டு உலர்ந்த வஸ்திரங்களைத் தரித்து புண்ட்ரத்தையும் தரித்து மறுபடியும் ஸ்நானம்செய்ய வேண்டும். உலர்ந்த வஸ்த்ரங்களில்லாவிட்டால் ஈர வஸ்த்ரத்தைப் பிழிந்து 7-காற்று அடிக்கச்செய்தால் அது உலர்ந்ததற்கு ஸமானமாகும்.

விடவேண்டுமவை.

நாம் சாப்பிடும் ஆகாரங்களின் ஸாராம்சத்தினாலேயே மனது போஷிக்கப்படுவதால் நாம் ஸாத்விகங்களான ஆகாரங்களைச் சாப்பிட்டால்தான் நமது மனதும் சாத்விகமாகி நமது

க்ஷேமத்தைத் தரக்கூடிய விஷயங்களை ஆலோசிக்க யோக்யமாகும். நாம் தாமஸங்களான ஆகாரங்களைச் சாப்பிட்டால் அந்த மனதும் தாமஸமாகி கெட்ட விஷயங்களில் ப்ரவர்த்தித்து நம்மைக் கெடுத்துவிடும். ஆகையினால் நாம் உட்கொள்ளும் ஆகாரங்களே நமது க்ஷேமத்திற்கு முக்கிய காரணம்.

ஆகையினால் இந்தஉலகத்திலும் பரலோகத்திலும்க்ஷேமத்தையடைய விரும்புகிறவர்கள் ராஜஸ தாமஸ ஆகாரங்களை அவசியம் விட்டுவிடவேண்டியது.

அவையாவன.

பலவிதங்களான மத்யங்கள், மாம்ஸங்கள், அபீன், கஞ்சா, முதலியவைகளையும் ஆசாரமில்லாதவர்கள் பக்வம் பண்ணினதும் ஷியார் தொட்டதும், கடைகளில் விற்கப்படும், பக்வமான ஆகாரங்களும், முக்கியமாக காராம் பசுவின் பால், தயிர், மோர், நெய் முதலியவைகளையும் சாப்பிடக்கூடாது. அவசியம் விட்டுவிடவேண்டும். பகலில் ஓர் தடவையும், இரவில் ஓர் தடவைக்குமேல் ஆகாரம் சாப்பிடக்கூடாது. மற்றும் பொய் சொல்வது, திருடுவது, த்ரோகம்செய்வது, கோள்சொல்வது, ப்ராணிஹிம்சைசெய்வது, சூதாடுவது, பொடிபோடுவது, புகையிலை தின்பது, சுருட்டு குடிப்பது, நர்த்தனம் நாடகம் பார்ப்பது, சங்கீதம் கேட்பது, நாஸ்திக்யம் பேசுவது, பெரியோரை அனாதரிப்பது, உபதேசித்த ஆசாரியனை தூஷிப்பது, பிறரை தூஷிப்பது, தாஸிகளையோ பரஸ்த்ரீகளையோ புணர நினைப்பது முதலியதும் 8-ம் வேதத்தைப் படிப்பது, வேதத்தைக் கவனித்துக் கேட்பது, ஸம்ஸ்க்ருத பாஷையிலுள்ள இதிகாச புராணங்களைப் படிப்பது மற்றும் ஜீவனார்த்தமாக கள்ளுக்கடை, தோல்க்கடை, வைப்பது அன்னியஜாதி தர்மங்களை அனுஷிக்க ஆசைப்படுவது முதலிய சாஸ்திர நிஷித்தங்களையும் மற்றும் தர்ம விருத்தங்களான அர்த்தகாமங்களையும் விட்டுவிடவேண்டும். இது எல்லாவற்றிலும் முக்கியமானது. இந்த விபரீதங்களைச் செய்யுபவர்களோடு ஸகவாஸம் ஆகையினால் அதை முக்கியமாக விடவேண்டியது.

செய்யவேண்டுமவை.

ஸத்சூத்ரர்கள் தன் ஜாதி தர்மங்களை யெல்லாவற்றையும் நன்கறிந்த னுஷ்டிப்பது. மற்றை மூன்றுஜாதிகளுக்கும் சக்திக்கு அனுகுணமாக சுச்ருஷைசெய்வது ஸத்யமே சொல்வது முடிந்த வரையில் தர்மத்தையே செய்வது, ஸர்வ ஜந்துக்களுக்கும் சாஸ்திர ஸம்மதமான அனுகூலத்தைச்செய்வது, தாய் தகப்பனர் ஆசாரியன் இவர்கள் விஷயத்தில் பக்தியோடு கைங்கர்யங்களைச் செய்வது ஞானம், அனுஷ்டானம் வைராக்கியமுள்ள ஆசார்யனை ஆச்ரயித்து பஞ்சஸம்ஸ்காரங்களை செய்துகொள்வது அவரிடம் முறைப்படி ஆத்ம ஞானத்தை அறிந்துகொள்வது பிறகு ஞானத்திற்கு அனுகுணமாக அனுஷ்டிப்பது, குடும்பகாரியங்களையும்கூட ஈச்வரனுடைய கைங்கர்யமென்றே நினைத்து நடத்துவது, மறுபடியும் ஸம்ஸாரத்தில் பிறந்து கஷ்டப்படாமலிருக்கும்படி ஸதாசார்யன் மூலமாக ப்ரபத்தியை அனுஷ்டிப்பது, இப்படி மகோபகாரத்தை செய்தவரிடம் அவருடைமை பர்யந்தமாக அன்பு பாராட்டி இருப்பது, புண்ணிய க்ஷேத்ரங்களிலாவது முடியாவிட்டால் மகான்களுடைய சமீபத்திலாவது வஸிப்பது, பிறகு வாழ்நாள் வீணாகாதபடி வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூஜித்தும் பொழுதை போக்குவது, தாங்க முடியாத துயரம் வந்தாலும் அதை தனது கர்மமடியாகநினைத்து ஸர்வேச்வரனிடம் பக்தி குறையாமலிருப்பது, இங்குமங்கும் ஈச்வரனே ரக்ஷகனென்று நம்பியிருப்பது முதலியவைகள் அவச்யம் அனுஷ்டிக்க வேண்டியவற்றில் பிரதானமானவைகள்.

கர்பாதானம்.

பத்நீ ருதுவான தினம் முதல் 4-தினம் கழித்து ஜ்யோதிஷ சாஸ்திரப்படி சுபமான தினத்தில் அதிலும் இரட்டைப்பட்ட தினங்களில் கர்பாதானம் செய்யவேண்டும்.

ஷை தினத்தில் மங்கள ஸ்நானம்பண்ணி நூதனவஸ்திரம் தரித்து பிராமணர்களிடம் அனுமதி பெற்றுக்கொண்டு திதி வார நக்ஷத்திரங்களைச்சொல்லி ஸ்ரீபகவதாக்ஞயா மமபத்ந்யாம் ஜநிஷ்யமாண ஸர்வசிசுநாம் பீஜ கர்பவாஸ ஜநித தோஷசாந்தித்வாரு ஸ்ரீமந்நாருயணப்ரீத்யர்த்தம் கர்பாதானம்கரிஷ்யேஎன்று ஸங்கல்பித்துக்கொண்டு அதற்கங்கமாக விஷ்வக்ஸேந பூஜை

செய்து நாந்தீச்ருத்தத்தையும் ஹிரண்ய ரூபமாகப்பண்ணி பத்னியினுடைய வலது மூக்கில் அருகம்புல், அமுக்ரு இலைகளின் ரஸத்தைப் பிழியவேண்டும்.

பிறகு ஆரத்தி எடுத்து பந்துக்களுக்கு சந்தன தாம்பூலங்களையும் பிராமணர்களுக்கு தாம்பூலம் யதாசக்தி தக்ஷிணைகளையும் கொடுக்கவேண்டும்.

அன்று இரவில் நல்ல லக்கினத்தில் மம ஸத்ஸந்தான ஸம்ருத்யர்த்தம் பலதானம்கரிஷ்யே என்று ஸங்கல்பித்துக்கொண்டு பிராமணர்களுக்கு தக்ஷிணையுடன் பலதானங்களைப் பண்ணி படுக்கையில் உட்கார்ந்து பத்னியின் மடியைத்தொட்டுக்கொண்டு விஷ்ணவேநம:த்வஷ்ட்ரேநம:ப்ரஜாபதயேநம:தாத்ரேநம: ஸிநீவால்யைநம: ஸரஸ்வத்யைநம: அச்விப்யாம்நம: பர்ஜந்யாயநம: என்றுசொல்லி ஜபித்துவிட்டு பிறகு ஸங்கமத்தைச்செய்யவேண்டியது. ஷடிதினம் ருதுகாலமாகவிருந்தால் புருஷன் காலையில் ஸ்நாநம் செய்யவேண்டும். பத்னி ஸ்நானம்செய்யவேண்டியதில்லை. ஸங்கமத்திற்குப் பிறகு கீழேசொல்லியபடி சுத்திசெய்யவேண்டும்.

பும்ஸவநம்.

பத்னி கர்ப்பவதியான 2, 3, 4, மாதங்களில் ஓர் சுபதினத்தில் புருஷன் மங்களஸ்நானம்செய்து பிராமணர்களனுக்ஞை பெற்று முன்போலவே திதிவார நக்ஷத்திரங்களைச் சொல்லி ஸ்ரீமந்நாராயண ப்ரீத்யர்த்தம் என்று பும்ஸவநம்கரிஷ்யே என்று ஸங்கல்பித்து விஷ்வக்ஸேந பூஜை நாந்தீச்ருத்தங்களைச் செய்து பசுவின் தயிரை கொஞ்சமெடுத்து பத்னியின் வலதுகையில் கொடுத்து பும்ஸவநமென்று மூன்றுதடவை சொல்லச்செய்து அந்த தயிரை பத்னியானவள் சாப்பிட்டபிறகு மறுபடியும் அப்படியே இரண்டு தடவை சாப்பிடச்செய்து நீருஜனம்செய்து பந்துக்களுக்கு சந்தனம் தாம்பூலங்களைக் கொடுக்கவும் பிராமணர்களுக்கு பழம், தாம்பூலம் தக்ஷிணைகளை சக்திக்குத் தகுந்தபடி கொடுக்கவும்.

ஸீமந்தம்.

கர்ப்பிணியான 4, 6, 8-வது மாதங்களில் ஓர்சுபதினத்தில் முன்போலவே ஸீமந்தோந்நயநம்கரிஷ்யே என்று ஸங்கல்பித்து

விஷ்வக்ஸேந பூஜை நாந்தீகளைச்செய்து நூதன வஸ்த்ரம் தரித்து பத்னியினுடைய வலது மூக்கில் அருகம் பில்லின் சாற்றை அக்னயெ நம: ருக்ஞேவருணாயநம: என்றுசொல்லி பிழியவேண்டியது. பிறகு அத்திக்காய் தர்பத்துடன் கட்டி வைத்த முள்ளம் பன்றியினுடைய முள்ளினல் பத்னியின் புருவங்களின் நடுவிலிருந்து தலைமயிரின் நடுவில் ப்ரஜாபதயேநம: என்றுசொல்லி 3-தடவை கீறிவிட்டு நிருஜனம்செய்து முன் போல சந்தன தாம்பூல தக்ஷிணைகளைக் கொடுக்கவேண்டியது.

ஜாதகர்ம.

குழந்தை பிறந்து தொப்புள்கொடி அறுப்பதற்கு முன்னமே பிதாவானவர் ஸ்நானம் பண்ணிவிட்டு திதிவார நக்ஷத்திரங்களைச்சொல்லி அஸ்ய குமாரஸ்ய கர்பாம்புபாநதோஷ பரிஹாரார்த்தம் பீஜகர்பதோஷ சாந்தியார்த்தம் பலம் ஆயுஸ் ஆரோக்யஸித்யர்த்தம் ஸ்ரீமந்நாராயண ப்ரீத்யர்த்தம் ஜாதகர்மகரிஷ்யே என்று ஸங்கல்பித்துக்கொண்டு விஷ்வக்ஸேந பூஜை நாந்தீச்ராத்தங்களைப் பண்ணி கொஞ்சம் நெய், தேன் கலந்து அதில் தங்கத்தைத் தேய்த்து சிசுவின் வாயில் சேர்த்து தேவாயஸவித்ரேநவ: ஸரஸ்வத்யைநம: அச்விப்யாம்நம: இந்திராயநம: என்று சொல்லிவிட்டு பிராமணர்களுக்கு நெல் முதலிய தானங்களைச்செய்யவேண்டியது.

நாமகரணம்.

ஆசௌசம் போனபிறகு 32-வது தினத்தில் பிதாவானவர் திதிவார நக்ஷத்திரங்களைச்சொல்லி அஸ்யகுமாரஸ்ய பீஜகர்பதோஷ சாந்தித்வாரு ஸ்ரீமந்நாராயணப்ரீத்யர்த்தம் நாமகரணம் கரிஷ்யே என்று ஸங்கல்பித்து விஷ்வக்ஸேந பூஜை நாந்தீச்ராத்தங்களைச்செய்து ஓர் தாம்பாளத்தில் அரிசியை சேர்த்து அந்த அரிசியில் நாராயணதாஸ: அல்லது ராமதாஸ: அல்லது கிருஷ்ணதாஸ: என்பதுபோன்ற வைக்கப்போகிற பெயரை எழுதி அது எந்த தேவதையின் பெயரோ அந்த தேவதையை அதில் ஆவாகனம்பண்ணி பூஜித்துவிட்டு சிசுவினுடைய வலது காதில் நாராயணதாஸோஸி என்று வைத்த பெயரைச்சொல்லி கையைக் கூப்பிக்கொண்டு பிராமணர்களைப் பார்த்து நாராயணதாஸோ, பவதோநமஸ்கரோமி என்றுசொல்லி அந்த பிராமணர்

கள் ஆயுஷ்மான்பவது நாராயணதாஸ: என்று ஆசீர்வதித்த பிறகு தக்ஷிணை தாம்பூலங்களைக் கொடுக்கவும்.

தொட்டிலிடுவது

குழந்தை பிறந்து 12-வது தினத்தில் புருஷக்கும் 13-வது தினத்தில் ஸ்திரீயான குழந்தைக்கும் தொட்டிலிட வேண்டியது. ஷை தினங்களில் நக்ஷத்திர பொருத்தம் பார்க்கவேண்டியதில்லை.

கர்ணவேதம்

குழந்தை பிறந்து 6, 7, 8, 12, 16-வது மாதங்களில் சுக்லபக்ஷம் பகலில் நல்லநக்ஷத்திரத்தில் ஸத்சூத்ர குழந்தைகளுக்கு இரும்பு ஊசியினால் காதுகுத்தவேண்டியது.

நிஷ்க்ரமணம்

4, 6-வது மாதத்திலாவது சுபதினத்தில் பிதா திதி வார நக்ஷத்திரங்களைச் சொல்லி ஸ்ரீமந் நாராயண ப்ரீத்யர்த்தம், சிசோ: ஆயுராரோக்யாதி ஸித்யர்த்தம் நிஷ்கறமணம் கரிஷ்யே என்று ஸ்ங்கர்பித்து விஷ்வக்ஸேந பூஜை நாந்தீச்ரார்த்தங்களை செய்து அக்ஷதையில் 8 திக்பாலர்கள் சந்திரன் சூரியன் ஆகாசம் விஷ்ணு இவர்களை ஆவாகனம் செய்து பூஜித்து மங்கள வாத்யத்துடன் சந்திரன் சூரியன் பசு இவைகளை காண்பிவித்து (சந்த்ரார்க்கயோர் திகீசாநாம் திசாஞ்சககநஸ்யச) நிக்ஷேபார்த்த மிமம்தத்மி தேத்வாம் றக்ஷந்துஸர்வதா) என்று சொல்லிவிட்டு பிராம்ணர்களை ஆசீர்வதிக்கச் செய்யவேண்டும்.

உப வேசனம்

5-வது மாதத்தில் சுபதினத்தில் பிதாவானவர் அஸ்ய குமாரஸ்ய ஸர்வாரிஷ்ட சாந்த்யர்த்தம் ஸர்வமாங்கல்ய ஸித்யர்த்தம் உபவேசனம் கறிஷ்யே என்று திதி வார நக்ஷத்திரங்களைச் சொல்லி ஸங்கல்பித்து ஓர் ஆஸநத்தில் அக்ஷதையில் வராக பெருமாளையும் பூமிதேவியையும் ஆவாகனம் பண்ணி உபசாரங்களினால் பூஜித்து அதற்கு எதிரில் பூமியில் வஸ்திரத்தைப் போட்டு அதில் குழந்தையை மங்கள வாத்தியங்களோடு உட்காரவைத்து ரக்ஷைநம் வசுதேதேவி ஸதா ஸர்வகதம்சுபே ஆயுஷ்ப்றமாணம் ஸகலம் நிக்ஷிபஸ்வ ஹரிப்ரியே: என்று பூதேவியை ப்ரார்த்தித்து குழைந்தைக்கி கடி சூத்றத்தையும் கட்டி பிராம்மணர்களை ஆசீர்வதிக்கச் செய்யவேண்டியது.

முற்றிற்று.

கூடிய சீக்கிரம் இரண்டாம் பாகம் வெளிவரும்.

பக்கம்	வரி	அசுத்தம்	சுத்தம்
குறிப்பு	7	ங்களை	ங்கள்
13	18	ண்ட	ண்ட்
ஷை	19	ண்ட	ண்ட்
ஷை	25	ண்ட	ண்ட்
19	5	க்ராஜ	க்ரா
ஷை	12	க்கியம்	க்யம்
21	10	சீன	சீஞ